# FIRST INFORMATION REPORT

**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C 8097159

1. District : மாவட்டம் நாகப்பட்டினம் PS: காவல்நிலையம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு நாகப்பட்டினம் Year: ஆண்டு 2020 FIR No.: மு.த.அ. எண் 02/2020 Date: நாள் 14.10.2020
2. (i) Act சட்டம்: குற்றவியல் Sections பிரிவுகள்: U/s. 102 Cr.P.C and
   (ii) Act சட்டம்: விசாரணை முறைச் சட்டம் 1973 Sections பிரிவுகள்: 7-A of P.C. Act 1988
   (iii) Act சட்டம்: PC Act 1988 as amended by PC (Amendment) Act 2018 Sections பிரிவுகள்: as amended by the PC (Amendment Act 2018.
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :
3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் 14.10.2020 Date from : நாள் முதல் Date to : நாள் வரை
   Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் 17.00 Hrs Time to : நேரம் வரை 20.30 Hrs
   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 14.10.2020 Time : நேரம் 23.00 Hrs
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் Time : நேரம்
4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக – எழுத்துமூலம் (computer typed)
5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் 60 K.M. வடக்கு, சீர்காழி சார் பதிவாளர் அலுவலகம்
   Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி
   (c) In case outside limit of this Police Station, then the Name of P S இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் District மாவட்டம் –
6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் T.V.K. ஜெகேந்திரன் (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் த/பெ. கிருஷ்ணமூர்த்தி
   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 55/2020 (d) Nationality : நாட்டினம் இந்தியன் (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
   Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்
   (f) Occupation : தொழில் மாவட்ட [illegible] ஆய்வுக்குழு அலுவலர் (g) Address : முகவரி மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம், தஞ்சாவூர்.
7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary) தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்) (1) ஆவண எழுத்தர் திரு. K. வல்லவன், த/பெ. கலிய-பெருமாள், கன்னியாகுடி, (2) ஆவண எழுத்தர் திரு R. கணேசன், த/பெ. ராஜாமணி, அகரஇருந்தார், (3) ஆவண எழுத்தர் திரு J. பாலகுரு, த/பெ. ஜெயராமன், காளி, (4) ஆவண எழுத்தர் திரு R. ரவிச்சந்திரன் த/பெ. ராஜாமணி, சீர்காழி.
8. Reasons for delay in reporting by the complainant / Informant: குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

– தாமதமில்லை –

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

– இல்லை –

10. Total value of properties stolen / involved : –
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any: –
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

**பணிந்து சமர்பிக்கப்படுகிறது** இன்று 14.10.2020 ஆம் தேதி 23.00 மணிக்கு நாகப்பட்டினம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புபிரிவு காவல் ஆய்வாளர் க.ரமேஷ் குமார் ஆகிய நான் அலுவலகத்தில் ஆஜரில் இருந்தபோது திரு.K.கஜேந்திரன், மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர், தஞ்சாவூர் மற்றும் நாகப்பட்டினம் மாவட்டங்கள் என்பவர் கொடுத்த அறிக்கையின்மீது வழக்கு பதிவு செய்த விபரம் பின்வருமாறு. அனுப்புநர், திரு.K.கஜேந்திரன், மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர், தஞ்சாவூர் மற்றும் நாகப்பட்டினம் மாவட்டங்கள். பெறுநர், காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, நாகப்பட்டினம். அய்யா, மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலராகிய நான், இரகசிய தகவலின்படி நாகப்பட்டினம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலர்களுடன் சேர்ந்து 14.10.2020-ந் தேதி மாலை 17.00 மணி முதல் 20.30 மணி வரை சீர்காழி சார் பதிவாளர் அலுவலகத்தில் திடீர் சோதனை மேற்கொண்டோம். மேற்படி திடீர் சோதனையின்போது சீர்காழி சார்பதிவாளர் அலுவலகத்தில், சார்பதிவாளர் பொறுப்பில் இருந்த உதவியாளர் திருமதி.N.நாகநந்தினி என்பவர் முன்னிலையில் சோதனை மேற்கொண்டபோது சார்பதிவாளர் அலுவலகத்திற்குள் இருந்த 1)ஆவண எழுத்தர் திரு.K.வல்லவன், த/பெ.கலியபெருமாள், கன்னியாகுடி என்பவரிடமிருந்து ரு.8,100/-, 2)ஆவண எழுத்தர் திரு.R.கணேசன், த/பெ.ராஜாமணி, அகரஇழத்தூர் என்பவரிடமிருந்து ரு.7,650/-, 3)ஆவண எழுத்தர் திரு.பாலகுரு, த/பெ.ஜெயராமன், காளி

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ......–............ Rank ........–........ to take up the Investigation / Refused Investigation / transferred to PS.................–.....................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் .........–.......... பதவி .......–........... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..............–.......................... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14/10/2020

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு K. GAJENDRAN
DY. ILO

14.10.2020
Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

15.10.2020/09.30hrs.

Name: பெயர் G. RAMESH KUMAR
Rank: நிலை INSPECTOR OF POLICE No. எண் ..........
Vigilance and Anti Corruption
Nagapattinam

**நாகப்பட்டினம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.02/2020 வழக்கின் முதல் தகவல் அறிக்கையின் தொடர்ச்சி :-**

என்பவரிமிருந்து ரூ.19,900/-, 4)ஆவண எழுத்தர் திரு.R.ரவிச்சந்திரன், த/பெ.ராஜாமணி, சீர்காழி என்பவரிடமிருந்து ரூ.3,000/- ஆகக்கூடுதல் 38,650/- பணத்தையும் ஆவண எழுத்தர்களான 1)திரு.K.வல்லவன், 2)திரு.R.கணேசன், 3)திரு.பாலகுரு, 4)திரு.R.ரவிச்சந்திரன் ஆகியோர் குற்றமுறு நடவடிக்கை மூலம் கிரய ஆவணங்களை பதிவு செய்தவர்கள் கொடுத்த கையூட்டு பணத்தை பெற்று சார்பதிவாளருக்கும் மேற்படி சார்பதிவாளர் அலுவலகத்தில் பணிபுரிபவர்களுக்கும் கையூட்டாக கொடுக்க வைத்திருந்த பணம் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் நடவடிக்கைகள் மற்றும் மகஜரில் கைப்பற்றப்பட்டது. இத்திடீர் சோதனையின்போது கைப்பற்றப்பட்ட மேற்படி பணம் ரூ.38,650/-, தயார் செய்யப்பட்ட நடவடிக்கை மற்றும் மகஜர், கைப்பற்றப்பட்ட ஆவணங்கள் மற்றும் திரு.K.வல்லவன் தானாக முன்வந்து கொடுத்த வாக்குமூலம் ஆகியவற்றை இத்துடன் இணைத்து ஆஜர்படுத்துகிறேன். எனவே எதிரிகள் (1)ஆவண எழுத்தர் திரு.K.வல்லவன், த/பெ.கலியபெருமாள், கன்னியாகுடி, (2)ஆவண எழுத்தர் திரு.R.கணேசன், த/பெ.ராஜாமணி, அகரஇழத்தூர், (3)ஆவண எழுத்தர் திரு.பாலகுரு, த/பெ.ஜெயராமன், காளி, (4)ஆவண எழுத்தர் திரு.R.ரவிச்சந்திரன், த/பெ.ராஜாமணி, சீர்காழி ஆகியோர்கள் மீது சட்டப்படி உரிய நடவடிக்கை மேற்கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறேன். (ஒப்பம்) K.கஜேந்திரன் 14.10.2020. மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர், தஞ்சாவூர் மற்றும் நாகப்பட்டினம் மாவட்டங்கள். திடீர் ஆய்வு செயல்முறைகள் மற்றும் நடவடிக்கைகள். இன்று 14.10.2020 ஆம் தேதி மாலை சுமார் 17.00 மணிமுதல் நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி தாலுக்கா, சீர்காழி ஊராட்சி ஒன்றிய அலுவலகத்திற்கு அருகில் உள்ள மேற்குபார்த்த வாசல் உள்ள சீர்காழி சார்பதிவாளர் அலுவலகத்தை திரு.K.கஜேந்திரன், த/பெ.கிருஷ்ணமூர்த்தி, மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், தஞ்சாவூர், நாகப்பட்டினம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு ஆய்வாளர் திரு.G.ரமேஷ் குமார் மற்றும் நாகப்பட்டினம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புபிரிவு அலுவலர்கள் உதவியுடன் மேற்கொள்ளும் திடீர் ஆய்வின் செயல்முறை நடவடிக்கைகள் குறித்து மாவட்ட துணை ஆய்வுகுழு அலுவலர் திரு.K.கஜேந்திரன் அவர்களால் தயார் செய்யப்படும் திடீர் ஆய்வு செயல்முறைகள் மற்றும் மகஜர் விபரம் பின்வருமாறு. நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி தாலுக்கா, சீர்காழி பழைய தாலுக்கா அலுவலக வளாகத்திற்கு பின்புறமுள்ள சீர்காழி ஊராட்சி ஒன்றிய அலுவலகத்திற்கு வடக்கு பக்கம் உள்ள சீர்காழி சார்பதிவாளர் அலுவலகத்தில் பத்திரபதிவுகள் செய்வதற்கு சீர்காழி சார்பதிவாளர் மற்றும் சார்பதிவக அலுவலக அலுவலர்கள் ஆவண எழுத்தர்கள் மற்றும் இடைத்தரகர்கள் மூலமாக பத்திரபதிவு செய்பவர்களிடம் பத்திரம் பதிவு செய்வதற்கு கையூட்டு கேட்டுப்பெறுவதாகவும், மேற்படி பொது பணியாளர்களுக்காக, பத்திரம் பதிவு செய்யவருபவர்களிடம் ஆவண எழுத்தர்கள் கையூட்டு பெற்று பொது பணியாளர்களுக்கு கொடுப்பதாகவும், நாகப்பட்டினம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புபிரிவு அலுவலகத்திற்கு கிடைத்த இரகசியதகவலினை இன்று 14.10.2020 ஆம் தேதி மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர், தஞ்சாவூர் ஆகிய

என்னிடம் தகவல் தெரிவித்ததன்பேரில், தஞ்சாவூர் துணை ஆய்வுக்குழு அலுவலர் ஆகிய நான் தஞ்சாவூரிலிருந்து காலை 11.30 மணிக்கு புறப்பட்டு நாகப்பட்டினம் லஞ்ச ஒழிப்பு பிரிவு அலுவலகத்திற்கு 14.15 மணிக்கு வந்தும், அங்கிருந்து திரு.G.ரமேஷ்குமார், காவல் ஆய்வாளர் சகிதம் இரண்டு அரசு வாகனங்களில் நாகப்பட்டினம் லஞ்சஒழிப்புபிரிவு அலுவலகத்திலிருந்து 14.10.2020 ஆம் தேதி 14.30 மணிக்கு புறப்பட்டு சீர்காழி, சார்பதிவாளர் அலுவலகத்திற்கு 17.00 மணிக்கு வந்து, மேற்படி விஜிலென்ஸ் குழுவினர் சகிதம் சீர்காழி சார்பதிவாளர் அலுவலகத்தில் சார்பதிவாளர் பணியிலிருந்த பொறுப்பு சார்பதிவாளர்/உதவியாளர் திருமதி.N.நாகநந்தினி என்பவரிடம் திடீர் ஆய்வு விபரம் தெரிவித்து திடீர் ஆய்வு மேற்கொள்ளப்பட்ட விபரம் பின்வருமாறு. மேற்படி சீர்காழி சார்பதிவாளர் அலுவலகமானது நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி தாலுக்கா, சீர்காழி பழைய தாலுக்கா அலுவலக வளாகத்திற்கு பின்புறமுள்ள சீர்காழி ஊராட்சி ஒன்றிய அலுவலகத்திற்கு வடக்கே மேற்குபார்த்த நுழைவாயிலுடன் கூடிய கீழ்தளம் மட்டுமுள்ள மாடிக்கட்டிடமாக அமைந்துள்ளது. மேற்படி சார்பதிவாளர் அலுவலகத்தின் நுழைவாயிலுக்கு அருகில் சிரிய வராண்டாவும் அதற்கு கிழக்கே சார்பதிவாளர் இருக்கையுடன் கூடிய பெரிய ஹாலும், ஹாலின் வலதுபுறம் கணினி அறையும், ஹாலுக்கு கிழக்கு பக்கம் அலுவலர்கள் அறையும், அலுவலக அறைக்கு தெற்கே கழிவறையும், ஹாலுக்கு இடது பக்கம் பதிவேடுகள் வைப்பறையுமாக சீர்காழி சார்பதிவாளர் அலுவலகம் அமைந்துள்ளது. மேற்படி அலுவலகத்தில் திடீர் ஆய்வின்போது சீர்காழி சார்பதிவாளர் அலுவலகத்திற்குள் ஹாலில் சார்பதிவாளர் பொறுப்பில் உதவியாளர் திருமதி.N.நாகநந்தினி என்பவரும், Data Entry Operator திருமதி.M.சுசித்ரா என்வரும் அவரது இருக்கையில் அமர்ந்திருந்தார்கள். மேற்படி அலுவலகத்திற்குள் 1)ஆவண எழுத்தர் (No.B1/2009 MDI) திரு.K.வல்லவன், த/பெ.கலியபெருமாள், கன்னியாகுடி, 2)ஆவண எழுத்தர்(No.A132/95 MDI) திரு.R.கணேசன், த/பெ.ராஜாமணி, அகரஇழத்தூர், 3)ஆவண எழுத்தர் (No.B913/91 MDI) திரு.பாலகுரு, த/பெ.ஜெயராமன், காளி, 4)ஆவண எழுத்தர் (No.B383/91 MDI) திரு.R.ரவிச்சந்திரன், த/பெ.ராஜாமணி, சீர்காழி மற்றும் சார்பதிவாளர் அலுவலக அலுவலர்கள் 1)திரு.G.துரைராஜன், இரவு காவலர், 2)திரு.V.தண்டபானி, இளநிலை உதவியாளர், 3)திரு.P.திருமுருகன், இளநிலை உதவியாளர், 4)திரு.M.ஸ்ரீநிவாசன், இளநிலை உதவியாளர், 5)திரு.S.விவேக், Camera Operator, 6)திருமதி.R.திரிபுரசுந்தரி, அலுவலக உதவியாளர் ஆகியோர் அவரவர் இருக்கையிலும் மற்றும் பத்திர பதிவு தொடர்பாக வந்த பொதுமக்களும் அலுவலகத்திற்குள் இருந்தனர். மாவட்ட ஆய்வுக்குழு துணை அலுவலர் மற்றும் நாகப்பட்டினம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புபிரிவு குழுவினர் அங்கிருந்தவர்கள் அனைவரிடமும் தங்களையும், தங்களுடன் வந்தவர்களையும் அறிமுகம் செய்தபோது, மேற்படி இடத்தில் நின்று கொண்டிருந்த சில நபர்கள் அவரவர்கள் நின்றுகொண்டிருந்த இடத்தை விட்டு நழுவ முயற்சித்தார்கள். மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர் அங்கிருந்தவர்களை நிறுத்தி விஜிலென்ஸ் குழுவினர் உதவியுடன் அவர்களை தனித்தனியாக விசாரித்தும் விஜிலென்ஸ் குழுவினர் உதவியுடன் சோதனை மேற்கொள்ளப்பட்டது. சரியான முகாந்திரம் கூறிய தொகை அவர்களிடம் திரும்ப ஒப்படைக்கப்பட்டது, சரியான முகாந்திரம் கூற இயலாத சந்தேகத்துடன் கூடிய கையூட்டு

தொகையானது சார்பதிவாளர் மற்றும் சார்பதிவாளர் அலுவலக அலுவலர்களுக்கு கையூட்டு கொடுப்பதற்காக வைக்கப்பட்டிருந்த பணமாக இருக்கலாம் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் கீழ்கண்ட விபரப்படியான மொத்தப்பணம் **ரூபாய்.38,650/-ம்** திடீர் ஆய்வின் மேல்நடவடிக்கைக்காக கைப்பற்றப்பட்டது. அதன் விபரம் பின்வருமாறு.

| வ. எண் | பெயர், பதவிமற்றும் முகவரி | திரும்பஒப்படைக்கப்பட்ட ரூபாய் | கைப்பற்றப்பட்டரூபாய் |
|---|---|---|---|
| 1 | ஆவண எழுத்தர் திரு.K.வல்லவன், த/பெ.கலியபெருமாள், கன்னியாகுடி, | - | 8,100 |
| 2 | ஆவண எழுத்தர் திரு.R.கணேசன், த/பெ.ராஜாமணி, அகரஇழத்தூர். | - | 7,650 |
| 3 | ஆவண எழுத்தர் திரு.பாலகுரு, த/பெ.ஜெயராமன், காளி | - | 19,900 |
| 4 | ஆவண எழுத்தர் திரு.R.ரவிச்சந்திரன், த/பெ.ராஜாமணி, சீர்காழி | - | 3,000 |
| 5 | திருமதி.M.சுசித்ரா, Data Entry Operator | 550 | - |
| 6 | திரு.G.துரைராஜன், இரவு காவலர், | 2,000 | - |
| 7 | திரு.V.தண்டபானி, இளநிலை உதவியாளர் | 500 | |
| 8 | திரு.P.திருமுருகன், இளநிலை உதவியாளர், | 400 | |
| 9 | திரு.M.ஸ்ரீநிவாசன், இளநிலை உதவியாளர், | 850 | |
| 10 | திரு.S.விவேக், Camera Operator, | 170 | |
| 11 | திருமதி.R.திரிபுரசுந்தரி, அலுவலக உதவியாளர் | 30 | |
| 12 | திரு.N.குருநாதன், த/பெ.நடராஜபிள்ளை, இடமணல் | 40,000 | |
| 13 | திரு.M.ரவி, த/பெ.முத்தையன், பழுவஹூர் | 6,000 | |
| | **மொத்தம்** | **50,100** | **38,650** |

மேற்படி நபர்களிடம் அவர்கள் வைத்திருந்த பணத்திற்குண்டான காரணத்தை கேட்க அந்த பணத்திற்குண்டான சரியான முகாந்திரம் தெரிவித்ததால் அந்த பணம் ரூபாய் 50,100/- அவரவரிடம் திருப்பி கொடுக்கப்பட்டது. ஆவண எழுத்தர்கள் வைத்திருந்த மொத்தம் ரூபாய் 38,650/- பற்றி விளக்கம் கேட்க சரியான முகாந்திரம் கூறாததால் அந்தொகை அவர்கள் எழுதிய பத்திரத்திற்கு அவர்களது பார்டியினருக்கு சார்பதிவாளர் சலுகை செய்யவேண்டி, சார்பதிவாளருக்கும் மற்றும் சார்பதிவாளர் அலுவலக அலுவலர்களுக்கும் கையூட்டாக கொடுக்க வைத்திருந்த பணமாக இருக்கலாம் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் மேற்கண்ட விபரப்படியான மொத்தப்பணம் **ரூபாய்.38,650/-** மற்றும் 1)சீர்காழி சார்பதிவாளர் அலுவலக வருகை பதிவேடு, 2) சீர்காழி சார்பதிவாளர் பணியாளர் மிகை கையிருப்பு தொகை பற்றிய பதிவேடு ஆகிய 2 ஆவணங்கள் இந்த திடீர் ஆய்வின் மேல் நடவடிக்கைக்காக கைப்பற்றப்பட்டது. திடீர் சோதனையின்போது

சீர்காழி சார்பதிவாளர் பணியாளர் மிகை கையிறுப்பு தொகை பற்றிய பதிவேட்டின்படி திருமதி.M.சுசித்ரா, Data Entry Operator அவர்களைதவிர மற்ற அலுவலர்கள் யாரும் அவர்கள் வைத்திருந்த தொகைகளை இன்று 14.10.2020 ஆம் தேதி பதிவு செய்யவில்லை. இருந்தபோதிலும் சார்பதிவாளர் அலுவலக அலுவலர்கள் கூறிய காரணங்கள் ஏற்புடையதாக இருந்ததால் அவர்களது பணம் அவர்களிடம் திரும்ப கொடுக்கப்பட்டது. சீர்காழி சார்பதிவாளர் பொறுப்பு திருமதி.N.நாகநந்தினி அவர்களிடம் விசாரிக்க தன்னிடம் பணம் ஏதும் இல்லை என தெரிவித்தார். சீர்காழி சார்பதிவாளர் பொறுப்பு திருமதி.N.நாகநந்தினி அவர்களிடம் இன்று பதிவு செய்யப்பட்ட ஆவணங்கள் பற்றி கேட்க, 12 கிரய பத்திரங்கள், 3 MOD, 2 Loan Clearance, 3 Release, 1 திருமணப்பதிவு ஆகியவை பதிவு செய்யப்பட்டதாக தெரிவித்தார். திடீர் ஆய்வின்போது மாவட்ட துணை ஆய்வுகுழு அலுவலர் அவர்கள் ஆவண எழுத்தர் (No.B1/2009 MDI) திரு.K.வல்லவன், த/பெ.கலியபெருமாள், கன்னியாகுடி அவர்களை விசாரணை செய்து தனியே வாக்குமூலம் பெறப்பட்டது. இந்த திடீர் சோதனை செயல்முறைகள் இன்று 14.10.2020 ஆம் தேதி இரவு 20.30 மணிக்கு முடிக்கப்பட்டது. திடீர் ஆய்வு செயல்முறைகள் மற்றும் நடவடிக்கைகளின் ஒவ்வொரு பக்கத்திலும் கையொப்பம் இடப்பட்டுள்ளது. **பணிந்து சமர்பிக்கப்படுகிறது.** இன்று 14.10.2020 ஆம் தேதி 23.00 மணிக்கு மேற்படி புகாரைப்பெற்று நாகப்பட்டினம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புபிரிவு குற்ற எண்.02/2020, U/s. 102 Cr.P.C. and Section 7-A of the Prevention of Corruption Act, 1988, as amended by the Prevention of Corruption (Amendment) Act, 2018-ன்படி வழக்கு பதிவு செய்யப்பட்டது.

(G.RAMESH KUMAR), 14.10.2020
காவல் ஆய்வாளர்,
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு,
நாகப்பட்டினம்.

இவ்வழக்கின் முதல் தகவல் அறிக்கையின் அசல், வாதியின் அறிக்கை, திடீர் ஆய்வு செயல்முறைகள் மற்றும் நடவடிக்கை, எதிரி-1 திரு.K.வல்லவன், த/பெ.கலியபெருமாள், வடக்குதெரு, கன்னியாகுடி, திருப்பன்கூர் அஞ்சல், சீர்காழி வட்டம், நாகப்பட்டினம் மாவட்டம் என்பவரின் வாக்குமூலம் ஆகியவற்றை கனம் தலைமை நீதித்துறை நடுவர் மற்றும் சிறப்பு நீதிபதி, நாகப்பட்டினம் அவர்களுக்கு பணிந்து சமர்பித்தும், இதர நகல்கள் சம்மந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கு அனுப்பியும், நகல் ஒன்று நிலைய கோப்பிலும் வைக்கப்பட்டது.

(G.RAMESH KUMAR), 14.10.2020
காவல் ஆய்வாளர்,
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு,
நாகப்பட்டினம்